FORUM OF BSNL UNIONS/ASSOCIATIONS OF EXECUTIVES ANந NON EXECUTIVES

# தமிழ் மாநிலம்

## தமிழகFORUMமுடிவுகள்

தேதி:-08.06.2015

அன்பார்ந்த தோழர்களே,

தமிழக FORUM கூட்டம் 08.06.2015 அன்று சென்னையில் FORUM தலைவர் தோழர் R.பட்டாபி தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்டவர்களை வரவேற்று அகில இந்திய FORUM முடிவுகளை தமிழக அமைப்பாளர் தோழர் S.செல்லப்பா விளக்கினார். பின்னர் கீழ் கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

1) BSNL அறிவித்துள்ள இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை இலவச அழைப்புகள் என்கின்ற திட்டத்தையும், ஜூன் 16 முதல் மொபைல் தொலைபேசியில் இலவச ரோமிங் திட்டத்தையும் விளக்கி தமிழில் வெளியாகும் சுற்றறிக்கையினை மாவட்ட FORUMங்கள் திட்டமிட்டு பொது மக்கள் மத்தியில் வினியோகிக்க வேண்டும்.

2) நமது மாவட்ட FORUM தலைவர்கள் இது தொடர்பாக பத்திரிக்கை செய்திகளை வெளியிடுவதோடு, அனைத்து லோகல் TV சேனல்களிலும் இது தொடர்பான பேட்டியை வழங்க வேண்டும்.

3) மாவட்டFORUMங்கள் சார்பாக அனைத்து அலுவலகங்கள் மற்றும் தொலைபேசி நிலையங்களிலும் இந்த திட்டங்களை விளக்கி FLEX BANNERகள் வைக்க வேண்டும்.

4) வாய்ப்பு உள்ள இடங்களில் தெருமுனைக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

5) தொலைபேசி இணைப்புகள் வழங்குவதற்கான இடங்களை கண்டு பிடித்து அங்கு இணைப்புகள் கொடுப்பதற்கான திட்டங்களை இந்த மாதத்தில் இதற்கான சிறப்பு WORKS COMMITTEE கூட்டங்களை நடத்தி திட்டமிட வேண்டும். உபகரணங்கள் பற்றாக்குறை இருக்கும் பட்சத்தில் அது தொடர்பான விவரங்களை மாநில FORUMத்திற்கு உடனடியாக தகவல் தர வேண்டும்.

6) வாய்ப்புள்ள அனைத்து பகுதிகளிலும் சிறப்பு மேளாக்களை நடத்த வேண்டும்.

7) நடைபெற்ற விவரங்களை பரிசீலித்து மாநில FORUMத்திற்கு ஜூன் 25ஆம் தேதி தகவல் தர வேண்டும்.

8) மாவட்ட நிர்வாகங்கள் செய்ய வேண்டிய உதவிகள் தொடர்பாக மாநில நிர்வாகத்திற்கு மாநில FORUM உடனடியாக கடிதம் மூலம் தெரிவிப்பது.

9) ஒரு மாத காலம் விடாப்பிடியாக இந்த பணிகளை செய்து நமது லேண்ட்லைன் மற்றும் மொபைல் இணைப்புகளை கணிசமாக உயர்த்த வேண்டும்.

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள,

| | | |
|---|---|---|
| R.பட்டாபிராமன் | S. செல்லப்பா | A.பாபு ராதாகிருஷ்ணன் |
| Forum தலைவர் & CS NFTE | Forum கன்வீனர் | மாநிலச் செயலர், BSNLEU |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | -Sd- |
| M.கோபிநாதன் | S.சிவக்குமார் | K.ராஜசேகரன் | P.அழகுபாண்டியராஜா | T.செந்தில் குமார் | A.சிவராமன் |
| CS,SNEA(I) | CS,AIBSNLEA | CS, AIBSNLOA | CS, SNATTA | CS, TSOA | CS, SEWAB SNL |